Government of Western Australia
Mental Health Commission

ஈ சி ரி க்கு உளநல தீர்ப்பாயத்தின் அங்கீகாரம் வேண்டப்படும் வேளையில், உங்களது மனநோய் மருத்துவர் தீர்ப்பாயத்திற்கு எழுத்தில் விண்ணப்பிப்பார் மேலும், தீர்ப்பாயம் உங்கள் விடயத்தை மீளாய்வு செய்யும்.

நீங்கள் ஒரு வயதான, கட்டாய நோயாளராயின் மற்றும் உங்கள் உயிரைப் பாதுகாக்க அல்லது நீங்கள் பாரதூரமான உடல் ஊறினை உங்களுக்கோ அல்லது இன்னொருவருக்கோ விழைவிப்பதைத் தடுக்க ஈ சி ரி தேவைப்பட்டால் அந்தக் கட்டத்தில் ஈ சி ரிக்கு தீர்ப்பாய அங்கீகாரம் வேண்டப்படாது. எவ்வாறாயினும், இந்த விடயத்தில் பிரதான மன நோய் மருத்துவர் ஈ சி ரி ஐக் கட்டாயம் அனுமதிக்க வேண்டும்,

## மேலும் தகவல்கள்

இந்தப் பிரசுரத்திலுள்ள தகவல்கள், உளநலச் சட்டம் 2014 இல் விபரிக்கப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடையதாகும்.

- பரிசோதனை ஒன்றிற்காக மனநோய் வைத்தியருக்குச் சிபாரிசு செய்தல்
- தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளருக்கான வழிமுறைகள்.
- சமூகச் சிகிச்சை வழிமுறைகள்
- தானாக விரும்பி வரும் நோயாளருக்கான தகவல்கள்
- மன வருத்தத்திற்கான மருத்துவத்தைப் பெறுதல்
- தனிப்பட்ட உதவியாளர்களுக்கான தகவல்கள்
- நியமிக்கப்பட்டவர்கள்: நியமனம் செய்வது எவ்வாறு அத்துடன் அதன் அர்த்தம் என்ன.

## ஏனைய பிரசுரங்கள் கிடைக்குமிடம்:

- உள நல நியாய மன்று
- உள நல ஆதரவு சேவை
- உள நல சட்ட நிலையம்

உள நல சட்டம் 2014 பற்றி அதிக தகவல்களுக்கும், ஏனைய வழி வகைகளுக்கும் வருகை தரவும், மன நல ஆணைய இணையத்தளம்: www.wa.gov.au
or phone (08) 6272 1200

This document can be made available in other languages and alternative formats on request.

Published by the Mental Health Commission (2015)

# உளநலக்குறைவுக்காக சிகிச்சை பெறுதல்



**நீங்கள் உள நலக்குறைவுக்காக சிகிச்சை பெற்றுவருகிறீர்களானால், உங்கள் உரிமைகள் என்ன அத்துடன் எதனை நீங்கள் எதிர்பார்க்க முடியும் என்பது பற்றிய தகவல்களை இந்த பிரசுரம் வழங்குகிறது.**

## சிகிச்சை என்றால் என்ன?

உளநல சேவையிலிருந்து நீங்கள் பெறக்கூடிய சிகிச்சையானது, மருந்துகள், மின்தூண்டல் அதிர்ச்சி வைத்தியம், அவசர உளநோய்ச் சிகிச்சை மற்றும் ஏனைய சுகாதார கவனிப்புகளை உள்ளடக்கிய ஒர் உளநோய் வைத்தியமாகும்.

ஒரு நோயாளி என்றவகையில், சிறந்த, சாத்தியப்படக்கூடிய சிகிச்சையைப் பெறுவது உங்களது உரிமையாகும், அத்துடன் சிகிச்சை விருப்பத்தேர்வுகள் குறித்து உங்களது உளநோய் மருத்துவர் மற்றும் ஏனைய குழு அங்கத்தவர்கள் உங்களுடன் பேசுவார்கள். உங்களது சிகிச்சையை மேம்படுத்துதல், ஆதரவு மற்றும் வெளியேறும் திட்டத்தில் நீங்கள் ஈடுபடுத்தப்படுவீர்கள் அத்துடன், உங்களது சம்மதம் (ஒப்பந்தம்) எப்பொழுதும் கோரப்படும்.

## உங்களது விருப்பத்திற்கு மாறாக உங்களுக்குச் சிகிச்சையளிக்கலாமா?

நீங்கள் ஒரு தன்னார்வ நோயாளராக இருந்தால், நீங்கள் தகவலை விளங்கிக்கொண்டு தெரிவித்த உங்கள் சம்மதமின்றி உங்களுக்குச் சிகிச்சையளிக்க முடியாது (அல்லது பாதுகாவலர் போன்ற உங்களுக்காக முடிவுகளை எடுக்கவல்ல இன்னொருவரின் தகவலறிந்த சம்மதம்). நீங்கள் விரும்பும், அல்லது உங்களுக்குத் தேவைப்படும் எல்லாத் தகவல்களும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டது, அத்துடன் சிகிச்சைக்கு இணங்கும் உங்கள் முடிவை நீங்கள் முற்றாகப் புர்ந்துகொள்கிறீர்கள் என்பது தகவலறிந்த சம்மதமாகும்.

உங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்கு அல்லது உங்களுக்கோ அல்லது இன்னொருவருக்கோ பாரதூரமான உடல் ஊறு ஏற்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக மன நோய்ச் சிகிச்சை தேவைப்படில், சம்மதமின்றி அது உங்களுக்குத் தரப்படலாம். இது அவசரகால மனநோய்ச் சிகிச்சை என அழைக்கப்படும்.

நீங்கள் ஒரு கட்டாய நோயாளரானால் (தங்கியிருந்து சிகிச்சைபெறும் விதிமுறை அல்லது சமூக சிகிச்சை விதிமுறை), உங்களது இணக்கமில்லாமலே உங்களுக்கு மன நோய்ச் சிகிச்சையளிக்கப்படலாம், ஆனாலும் அதற்காகக் கேட்க வேண்டும்.

## உங்களது விருப்பத்திற்கு மாறாக உங்களுக்குச் சிகிச்சையளிக்கலாமா?

நீங்கள் ஒரு தன்னார்வ நோயாளராக இருந்தால், நீங்கள் தகவலை விளங்கிக்கொண்டு தெரிவித்த உங்கள் சம்மதமின்றி உங்களுக்குச் சிகிச்சையளிக்க முடியாது (அல்லது பாதுகாவலர் போன்ற உங்களுக்காக முடிவுகளை எடுக்கவல்ல இன்னொருவரின் தகவலறிந்த சம்மதம்). நீங்கள் விரும்பும், அல்லது உங்களுக்குத் தேவைப்படும் எல்லாத் தகவல்களும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டது, அத்துடன் சிகிச்சைக்கு இணங்கும் உங்கள் முடிவை நீங்கள் முற்றாகப் புர்ந்துகொள்கிறீர்கள் என்பது தகவலறிந்த சம்மதமாகும்.

உங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்கு அல்லது உங்களுக்கோ அல்லது இன்னொருவருக்கோ பாரதூரமான உடல் ஊறு ஏற்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக மன நோய்ச் சிகிச்சை தேவைப்படில், சம்மதமின்றி அது உங்களுக்குத் தரப்படலாம். இது அவசரகால மனநோய்ச் சிகிச்சை என அழைக்கப்படும்.

நீங்கள் ஒரு கட்டாய நோயாளரானால் (தங்கியிருந்து சிகிச்சைபெறும் விதிமுறை அல்லது சமூக சிகிச்சை விதிமுறை), உங்களது இணக்கமில்லாமலே உங்களுக்கு மன நோய்ச் சிகிச்சையளிக்கப்படலாம், ஆனாலும் அதற்காகக் கேட்க வேண்டும்.

## மருத்துவச் சிகிச்சை (உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு)

நீங்கள் நோயாளியாக இருக்கும்போது, உங்களுக்குத் தேவைப்படக்கூடிய எதாவது மருத்துவச் சிகிச்சைக்கு நீங்கள் சம்மதம் கொடுக்கலாம். உங்களால் சம்மதம் அளிக்க முடியாதுவிட்டால், உங்கள் சார்பாக முடிவுகளை எடுக்க அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் உங்களுக்காகச் சம்மதம் தெரிவிக்கலாம்.

அவசிய மருத்துவ சிகிச்சை தேவைப்படுகின்ற, வைத்தியசாலையில் உள்ள ஒரு கட்டாய நோயாளராக நீங்கள் இருந்தால், நீங்கள் வேறொரு வைத்தியசாலைக்குப்போய் சிகிச்சை பெறுவதற்கு உங்களுக்கு அனுமதி யளிக்கப்படலாம். நீங்கள் விடுவிக்கப்பட்டாலும், நீங்கள் ஒரு கட்டாய நோயாளராகவே இருப்பீர்கள் அத்துடன் கட்டாயமாக உங்கள் சிகிச்சைத் திட்டத்தைத் தொடருவதுடன் விடுதலை முடிந்ததும் திரும்பவேண்டும்.

## மின்தூண்டல் அதிர்ச்சி வைத்தியம் (ECT)

பெருமளவு உளநலக்குறைவுகளுக்கு ஈ சி ரி ஒரு சிகிச்சையாகும். உங்கள் நிலைமையை மருந்துகள் சீராக்காதுவிடின், அல்லது உங்கள் சுகவீனம் மிகவும் கடுமையானதாயின், உங்கள் மன நோய் மருத்துவர் உங்களுக்காக ஈசிரி யைச் சிபாரிசு செய்வார்.

ஈ சி ரி எப்பொழுது கொடுக்கப்படலாமென, மட்டுப்பாடுகள் உண்டு. அவையாவன:

- ஈ சி ரி, 14 வயதுக்குக் குறைந்த எவருக்கும் கொடுக்கப்படக் கூடாது.
- தன்னார்வ குழந்தை நோயாளருக்கு (14-17 ஆண்டுகள்) அவர்களின் சம்மதத்துடன் அல்லது தகவலறிந்த இணக்கத்தைத் தர இயலாதவர்களாயின், அவர்களது பெற்றோரினதோ அல்லது பாதுகாவலரினதோ சம்மதத்துடன் ஈ சி ரி ஐக் கொடுக்கலாம். உளநல தீர்ப்பாயத்தின் அங்கீகாரமும் தேவைப்படும்.
- வயதான தன்னார்வ நோயாளருக்கு( 18 வயதுள்ளவர்களும் அதற்கு மேற்பட்டவர்களும்) அவர்களின் சம்மதத்துடன் அல்லது தகவலறிந்த இணக்கத்தைத் தர இயலாதவர்களாயின் நோயாளரின் சார்பாக முடிவுகளை எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ள பாதுகாவலர் போன்ற ஒருவரின் சம்மதத்துடன் ஈசிரி கொடுக்கப்படலாம்.
- கட்டாய நோயாளருக்கு உளநல தீர்ப்பாயத்தின் அங்கீகாரத்துடன் மாத்திரமே ஈ சி ரி கொடுக்கலாம்.